# ராணுவ ஆட்சேர்ப்பு: 2000 வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு 400 பேரே சமுகமளிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் இரண்டாயிரம் பேரை சேர்த்துக்கொள்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு 400 பேர் மாத்திரமே சமுகமளித்திருந்ததாக பெயர் குறிப்பிடவிரும்பாத இராணுவ அதிகாரி ஒரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 10 இதழ் 228
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26 — 09 — 1992

# ராஜீவ் கொலைக்கு கே. ஜி. பி. காரணம்?

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைக்கு முன்னாள் சோவியத் யூனியனின் உளவுப்படையான கே. ஜி. பி யே காரணமென நீதித்துறையின் முன்னாள் உயர் அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டி

(4ம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் விபரங்களை அரச அதிபர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, புத்தளம், நீர்கொழும்பு, அனுராதபுரம் பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பெயர்ப்பட்டியல்களை தந்து

(4-ம் பக்கம் பார்க்க)

★ புலிகளின் அதிகாலை அதிரடியில்

# பூநகரி படையினர் சிதறடிப்பு

# 25 இராணுவத்தினர் உயிரிழப்பு

## 21 சிப்பாய்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

**பூநகரி பள்ளிக்குடாப் பகுதி இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 21 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் மேலும் இராணுவத்தினர்பலரைக் காணவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இரு மினி முகாம்கள் உட்பட 62 காவலரண்கள் தகர்க்கப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.**

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள மினிமுகாம்கள் மீதும், காவலரண்கள் மீதும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் கைவிட்ட நிலையில் மத்திய முகாமை நோக்கி சிதறி ஓடினார்கள்.

ஒன்றரை மைல் நீளத்துக்கு அமைந்துள்ள 62 காவலரண்களையும், 2 மினி முகாம்களையும் விடுதலைப்புலிகள் மின்னல் வேகத்தில் தகர்த்து அழித்தனர்.

நேற்று நண்பகல் வரை பூநகரிப் பகுதியில் நடைபெற்ற மேற்படித் தாக்குதலின்போது இறந்த இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பூநகரி பள்ளிக்குடா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் இராணுவத்திடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

* 60 எம். எம். மோட்டார் - 2
* 60 எம். எம். ஷெல் - 56
* 60 எம். எம். ஷெல்லுக்குரிய பூஸ்டர் - 90
* ஆர். பி. ஜி. - 02
* ஆர். பி. ஜி. ஷெல் - 11
* ஆர். பி. ஜி. புறப்பளர் - 11
* ஆர். பி. டி. ஏ. கே. எல். எம். ஜி. - 03
* ஏ கே எல். எம். ஜி. மகசின் - 03
* ஆர் பி. டி. கோல்சர் - 01
* ரி-56 2 ரக றைபிள்கள் - 05
* அதற்குரிய மகசின்கள் - 65
* ரி-81 ரக றைபிள்கள் - 05
* அதற்குரிய மகசின்கள் - 31
* ரி-56 புதுமொடல் றைபிள் - 03
* ரி-56 1 ரக துப்பாக்கி - 01
* 203 பிஸ்டல் ரக துப்பாக்கி - 04
* ஜி-3 ஏ-3 ரக துப்பாக்கி - 01
* அதற்குரிய மகசின் - 11
* தொலைத்தொடர்பு சாதனம் - 01
* ஜே. ஆர். கைக்குண்டு - 23

(4ம் பக்கம் பார்க்க)

## படைத்தளபதிகள் பலர் பூநகரிக்கு அவசர விஜயம்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமிற்கு நேற்றுக்காலை படைத்தளபதிகள் பலர் விஜயம் செய்ததாக அரசுதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி முகாம்மீது புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல் முடிவடைந்தபின் இம்முகாமுக்கு வடபகுதி இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, யாழ்ப்பாண தளபதி பிரிகேடியர் ரேகன் தளுவத்த, இராணுவ தளபதி ஜெனரல் சிசில்வைத்திரயத்ன ஆகியோர் விஜயம் செய்தனர்.

மேலும் பல படை அதிகாரிகளும் இங்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(சி இ)

நாடு வாழ காடு வளர்ப்போம்

## லெப். கேணல் சுபன் உட்பட 6 வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித்தாக்குதலின்போது, மன்னார் மாவட்ட

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மற்றொரு பாரிய தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பூநகரி பள்ளிக்குடாப்பகுதியில் அமைந்துள்ள 62 இராணுவக் காவலரண்களையும் இரண்டு மினி முகாம்களையும் நேற்றைய திடீர் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தகர்த்து

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு எல்லையிலிருந்து படையினர் பின்வாங்கினர்

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது பாதுகாப்பு எல்லையிலிருந்து பின்வாங்கியதுடன் பல

(4-ம் பக்கம் பார்க்க)

## இறந்த படையினர் தொகை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

சுமார் 500 படையினர் வரையில் தங்கியிருந்த இம் முகாமில் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த படையினரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்என செய்திகள்

(4ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவுநாளையொட்டி அக்காச்சி குடியிருப்புக்கு இன்று குழாய் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு மக்களுக்கும் வாதரவத்தைக் கிராம மக்களுக்கும் திலீபனின் நினைவு நாளாகிய இன்று குழாய் மூலமும், பவுசர் மூலமும் தொடர்ந்து குடி

(4ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவுதினம் இன்று இறுதிநாள்: நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் உண்ணாவிரதம், பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

லெப்டினன் கேணல் தியாகி திலீபனின் 5-ம் ஆண்டு நினைவின் இறுதி நாளாகிய இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய முன்றலில் உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

தீவக அரசியல் பொறுப்பாளர் சேரலாதன் தலைமை வகிக்க தியாகி திலீபனின் தந்தையார் திரு. நா. இராசையா ஈகைச்சுடர் ஏற்றி வைப்பார்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### பனை ஓலைச்சார்வு

பனை ஓலைச்சாரிவு வாங்குகிறோம். மில்க் வைற் யாழ்ப்பாணம். (ஏ-2462)

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய KARAWILLA Capsules கிடைக்குமிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6841)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6799)


## 708 அகதிகள் தாயகம் திரும்பினர்

(சென்னை)

சென்னையிலிருந்து 708 ஈழ அகதிகள் நேற்றுக் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுவரையும் 28,100 அகதிகள் இலங்கை திரும்பியுள்ளதாக தமிழக செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது. (ரி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் 17 வயது 19 வயதிற்கிடைப்பட்ட மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

வடமராட்சி கோட்டம் -19 வயது பிரிவு- தேவரையாளி இ. க. எதிர் ஹாட்லிக் கல்லூரி, விக்கினேஸ்வரா எதிர் உடுப்பிட்டி அ. மி. இப்போட்டிகள் நெல்லியடி ம. வியில் நடைபெறும்.

17 வயது 'ஏ' பிரிவு- நெல்லியடி ம. ம. வி. எதிர் தேவரையாளி இ. க, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா எதிர் விக்கினேஸ்வரா இப்போட்டிகள் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும். (சி)

## இராணுவ நடவடிக்கையால் அக்கரைப்பற்று மோசமாக பாதிப்பு

(கொழும்புத்துறை)

அக்கரைப்பற்றுப் பகுதியில் சில இடங்களில் அண்மைக்கால ராணுவ நடவடிக்கையால் பாதிப்புகளிலிருந்து மக்கள் இதுவரை மீளவில்லை.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் 168 பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இதைவிட 132 ஆண்களின் நிலை என்னவென்று தெரியவில்லை என்றும் சுமார் 250 பிள்ளைகள் அனாதைகள் என்றும் இவர்களுக்கு உதவிகள் நிவாரணங்கள் மிகக் குறைவாக கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு 120 குடும்பம் அகதி முகாமில் தஞ்சம் புகுந்துள்ளன. இவையாவும் அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெற்று இவர்களுக்கு எவ்வுதவியும் எவராலும் வழங்கப்படவில்லை. இங்கு ஏனைய இடங்களிலும் தமிழ்ப்பகுதி கூடுதலாகப் புறக்கணிப்புக்குள்ளாகப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)


## WANTED

Wanted retired efficient, duty conscious Police, Navy officers. Apply with full particulars before 5-10-92.

Advt. No. A-2463,
C/O EELANADU,
JAFFNA.

(A-2463)

## WANTED

Wanted an efficient officer Experienced in Establishment Work. Ex-Government Servants preferable. Apply with details. Application closes on 6-10-92.

Advt. No. A-2464,
C/o Eelanadu Ltd., Jaffna.

(A-2464)

## 7 வீரர் உதைபந்தாட்டப் போட்டி

கலைவாணி விளையாட்டுக் கழகம் (நாவாந்துறை) நடாத்தும் 7 வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி

நாளை ஞாயிற்றுக்கிழமை (27-9-92) பிற்பகல் மேற்படி கழக மைதானத்தில் ஆரம்பமாகிறது.

பிரதம விருந்தினர்:

பங்குத் தந்தை
வண. பி. எம். இம்மனுவல்

யாழ். றோட்டறிக் கழகத் தலைவர்
திரு. வி. ரி. சிவலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள், கலைவாணி விளையாட்டுக் கழகம்.

(சி 6842)


## மைலந்தனை படுகொலை அடையாள அணிவகுப்பு அரசு பின்னடிப்பு

(கொழும்பு)

மட்டு. மைலந்தனை கிராமத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற படுகொலையில் இராணுவத்தினர் ஈடுபட்டதைநிரூபிக்கும் முயற்சிகளை அரசு பின்னடிப்புச் செய்து வருகிறது.

இப்படுகொலையில் ஈடுபட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்டுவதற்காக நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்புகள் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இப்படுகொலையில் ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

இதேவேளை இப்படுகொலை தொடர்பாக வெளியிடப்பட்ட விசாரணைஅறிக்கையை மறைப்பதற்கும் அரசு முயற்சி செய்துவருகிறது.

இந்தப் படுகொலையில் இராணுவத்தினர் ஈடுபட்டதை நிரூபிப்பதற்கும் அரசு தயக்கம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டி ஆட்சியை சிங்களவர் எதிர்ப்பர்

### அமைச்சர் மன்சூர்

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறையை ஒவ்வொரு சிங்களவர்களும் எதிர்ப்பர் என்று அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சமஷ்டி ஆட்சியை இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிங்களவர்களும் எதிர்ப்பார்கள் அதனால் சமஷ்டிமுறை பற்றி பேசுவதில் பயனில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க்கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவது முறையல்ல அவர்கள் ஏனைய முஸ்லிம் தலைவர்களோடும் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ரி)

## மகசின் சிறையிலுள்ள கிளி. இளைஞர்கள் விபரம்

(கொழும்பு)

மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட தமிழ் இளைஞர்கள் பெயர்விபரம் வருமாறு: சிவிகாங்கம் பஞலிங்கம் வட்டக்கச்சி, கிளிநொச்சி. கதிரன் கந்தையா யூனிட் 7, இராமநாதபுரம், வைரமுத்து சிவராசா முழங்காவில், சொக்கலிங்கம் நாகலிங்கம் ஸ்ரேசன் றோட், கிளிநொச்சி, வைரமுத்து பஞ்சலிங்கம் கணேசபுரம், பெருமாள் குணரத்தினம் கனகாம்பிகைக் குளம், சண்முகம் பாஸ்கரன் வட்டக்கச்சி, பொன்னுச்சாமி புவிராசரத்தினம் கண்டிறோட், கிளிநொச்சி, கும்புசாமி குமாரவேல் கண்டி றோட், கிளிநொச்சி. சிற்றம்பலம் சிவசுப்பிரமணியம் பழைய விவசாயப்பண்ணை முரசுமோட்டை, சரவணமுத்து யோகரத்தினம் கனகாம்பிகைக்குளம், வேலு சபாலிங்கம் பல்லவராயன்கட்டு, பூநகரி, இராமசாமி நடராசா கணேசபுரம், நாகராசா நரேந்திரன் ஜெயந்திநகர், ஞானப்பிரகாசம் லவுடசாமி வட்டக்கச்சி, திருச்செல்வம் சுரேஷ் கணேசபுரம், கதிர்காமத்தம்பி சிவராசா முரசுமோட்டை, யூனிட் 3, செல்லையா குமாரசாமி குமரபுரம் பரந்தன். (சு)

## தென்னிலங்கை கட்சிகள் 24 மணி நேரத்தில் இனபிரச்னையை தீர்க்கலாம்

(கொழும்பு)

பெரும்பான்மைக கட்சிகள் அந்தரங்க சுத்தியுடன் இருந்தால் இனப்பிரச்னை 24மணித்தியாலத்தில தீர்க்கப்பட்டு விடலாம் என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம் எஸ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட விதிகள் தொழிலாளர்களை பாதிக்குமானால் அதனை எதிர்த்துப் போராட இ. தொ கா. தயங்காது. தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் நினைத்தால் 24 மணி நேரத்திற்குள் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தமுடியும் என்றும் அவர் கூறினார். (ரி)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 27-ம் திகதி மாலை 3-30 மணிக்கு அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால், நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில், பெண்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தச் செய்யவேண்டிய யோக சிகிச்சை பற்றிய கருத்தரங்கு சரஸ்வதி பூசை காரணமாக அடுத்த மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## நவராத்திரி போட்டி

(யாழ்ப்பாணம்)

இருபாலை தமிழ் மாமன்றம் நடத்தும் நவராத்திரி விழா அக்டோபர் 5-ம் திகதி இருபாலையில் நடைபெறவுள்ளது.

நவராத்திரியையொட்டிச் 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியும், 'சகலகலாவல்லி' மனனப் போட்டியும் மன்றத்தினால் நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.


## St. Patrick's College, JAFFNA.

### பிரவேச விண்ணப்பம்-1993

பின்வரும் வகுப்புக்களுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு: 01-02-87 — 31-08-88ற்குள் பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு: 1984இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறும் ஆண்டு: 1982இல் பிறந்திருக்க வேண்டும்.
ஒன்பதாம் ஆண்டு: 1979இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப் பத்திரம் ரூபா 75-00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01-10-1992 தொடக்கம் 21-10-1992 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில், காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 24-10-1992 ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9-00 — 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ பிரவேசப் பரீட்சைத் தினம் 07-11-1992 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6 ஆம், 9ம் ஆம் வருட வகுப்புக்களுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ கத்தோலிக்க மாணவரெனின், அதை அத்தாட்சிப்படுத்தும் பங்குத் தந்தையின் கடிதமொன்றை விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஏ 2467) கல்லூரி அதிபர்.

# ஈழத் தெருவெங்கும் போர்ப்பரணி பாடிய விடுதலைக் குயில்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
26-9-1992
யாழ்ப்பாணம்

சாதாரண மனிதனாய் பிறந்து போராளியாய் வளர்ந்து பெரும் தியாகி ஆகிவிட்டார் திலீபன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாசறையில் நின்று தமிழ் ஈழத்தெருவெங்கும் போர்ப்பரணிபாடியவிடுதலைக் குயில் திலீபன்.

திலீபனுடைய வாழ்க்கை அவரது வரலாறு பின்னாலே வருகின்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

ஒரு விடுதலை வீரனுடைய சாவு ஆயிரமாயிரம் வீரர்களை உருவாக்கித்தரும் என்பது இன்றைய வரலாறு உணர்த்தி நிற்கும் பாடம்.

புன்னகை தவழும் உதடு, கேட்போரை எளிதில் தன் பக்கம் ஈர்க்கும் பேச்சு, பார்ப்போர் எவரையும் கவரும் வசீகரத் தோற்றம் நிறைந்தவர் திலீபன்.

இயக்கத்தின் செயற்பாடுகளில் கண்துஞ்சாது முழு மூச்சுடன் அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

இராணுவத் தாக்குதல்களாக இருந்தாலும் சரி, அரசியல் நடவடிக்கையாக இருந்தாலும் சரி திலீபனின் பங்கு விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அன்றைய சூழலில் முக்கியமானதாக கருதப்படுகிறது. இவரது திறமையையும், செயற்பாட்டையும் இனங்கண்டு கொண்ட விடுதலைப் புலிகளின் தலைமையானது யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இவரை நியமித்தது.

தலைமையின் பணிப்பை ஏற்றுக்கொண்ட இவர் இயக்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்தார். தன்னைவிட வயது கூடியவர்களை, அண்ணை என்றும் பெரியவர்களை 'ஐயா' என்றும் பெண்களை 'அம்மா' என்றும் அக்கா என்றும் அழைத்தும் எல்லோருடனும் அன்போடு பழகிவந்தார் இவரது நல்ல பண்புகளால் மக்கள் எல்லோரும் இவர்பால் அன்பு கொண்டிருந்தனர்.

திலீபன் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளராக விருந்து பணியாற்றிய காலம் மிக முக்கியமான தொரு காலமாகக் கருதப்படுகிறது.

தொடர்ந்து அன்னியர்கள் இருந்து வருகிறார்கள். இந்தக் கோட்டையில் புலிகளின் கொடி பறக்கும் நாள் தமிழருக்கு சுதந்திர நாள். இந்திய உளவுத்துறையான 'றோ' விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களை ஒழித்துக்கட்ட முயற்சி செய்துவருகிறது. தமிழர்களின் பிரச்னைகள் தீர்த்து வைக்கப்படாவிட்டால் மீண்டும் ஒரு தடவை ஆயுதம் ஏந்தத் தயங்கமாட்டோம்'' என்று மிகத் தெளிவாக இந்தியாவிற்கு தெரியப்படுத்தும் விதத்தில் பேசினார்.

ஆயுதங்களை எடுப்பதில் இருந்த அக்கறை தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் இந்திய அரசிடம் இருக்கவில்லை இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் பலவழிகளிலும் ஈடுபட்டு வந்ததை



ஆலய வடக்கு வீதியில் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்

தியாகப்போரில் ஆகுதியாகிக் கொண்டிருந்த திலீபனின் உண்ணாவிரதம் பற்றி இந்திய அரசு எவ்வித அக்கறையுமின்றி இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல திலீபனின் உடல்நிலை மிக மோசமாகிவந்தது இதனால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பலர் திலீபனிடம் வேண்டுகோள் விடுத்தனர். திலீபன் தான் எடுத்த லட்சியத்திலிருந்து இம்மியளவேனும் விலகமாட்டேன் என்று தனது இலட்சியத்தில் உறுதியாக நின்றார். கண்கள் மயங்கி, உடல் சுருங்கி, அடிக்கடி மயக்கமடையத் தொடங்கிய திலீபனைப் பார்த்த பலர் நீரை அருந்துமாறு கெஞ்சிக் கேட்டபோதும் அவர் மறுத்துவிட்டார் ''நான் தொடங்கிய போர் புனிதமானது. இப்படி நீங்கள் கேட்பதே இந்தப் போராட்டத்தைக் களங்கப் படுத்துவதாக உள்ளது. தயவு செய்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு யாரும் என்னைக் கோரவேண்டாம்'' என்று உறுதியாகவும் அறுதியாகவும் அனைவரிடமும் வலியுறுத்திக் கேட்டார் திலீபன்.

திலீபனின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து மாணவர்கள், பெண்கள், முதியவர்கள் என மக்கள் வெள்ளம் நல்லூரில் திரண்டது. தொடர்ந்து 12 நாட்கள் (265 மணித்தியாலங்கள்) தமிழின விடிவிற்காக உண்ணாவிரதமிருந்து 26-9-87 காலை 10-48 மணியளவில் தியாகி திலீபன் தியாக மரணம் அடைந்தார்.

## இன்று தியாகி திலீபன் எழுச்சி நாள்

பெண்களை முதன்முதலாக ஆயுதம் ஏந்திப் போராட வைத்த பெருமையும் திலீபனையே சாரும், பெண்களுக்கென 'சுதந்திர பறவைகள்' என்னும் அமைப்பை ஏற்படுத்தி அதனூடாக பெண்கள் அணியை திரட்டி அவர்களை போராளிகளாக உருவாக்க பெரும்பாடுபட்டார்.

இவரது அன்றைய நடவடிக்கை காரணமாக இன்று ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் உருவாகியுள்ளார்கள். அத்துடன் போர்க்களங்களில் அவர்களை வெற்றிவாகைசூடுவதனையும் நேரடியாக காண்கிறோம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நீண்ட வரலாற்றில் நிரந்தர இடத்தைப்பெற்றுவிட்ட திலீபன் வாழ்வு ஏனைய போராளிகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

1987-ம் ஆண்டு ஜூலை29 ம் திகதி இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற ஓர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு இந்திய அரசு அமைதிப்படை என்ற பெயரில் தனது இராணுவத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களில் குவித்தது. இந்தியாவின் இந்தப்போக்கினால் திலீபன் மிகவும் வேதனையுற்று இருந்தார்.

இந்தியா தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டதென்பதை ஆணித்தரமாக சகல இடங்களிலும் எடுத்துரைத்தார். இதே வேளையில் யாழ். கோட்டையின் வாசலில் இடம்பெற்ற கூட்டமொன்றில் திலீபன் உரையாற்றும்போது ''இந்தக் கோட்டையில்

சகிக்கமுடியாத திலீபன் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இவை 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் இல்லாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக இந்திய அரசுக்கு அறிவித்தார்.

திலீபனின் கோரிக்கைகள் எதனையும் இந்திய அரசு கவனத்தில் எடுக்கவில்லை.

இராணுவ முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் சித்திரவதைக்குள்ளாகும் எமது சகோதர சகோதரிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும்; புனர்வாழ்வென்ற போர்வையில் தமிழரின் பாரம்பரிய பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுவரும் பெருமளவிலான

— துரை —

சிங்களக் குடியேற்றங்களை தடை செய்ய வேண்டும், இடைக்கால அரசு அமைக்கும் வரை பொலிஸ் நிலையங்கள், சிவில் நிர்வாக அமைப்புகள் ஆகியவற்றில் சீரமைப்பு என்ற போர்வையில் சிங்களத் திணிப்பை நிறுத்தவேண்டும், பாடசாலைகளிலும், மக்கள் செறிந்துள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் ராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும். சிங்களக் குண்டர் படையான ஊர்காவல்படையைக் கலைத்து அதனிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப்பெற வேண்டுமென்ற ஐந்துகோரிக்கைகளும் இந்திய அரசினால் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்து 15-9-87ல் திலீபன் நல்லூர் கந்தசுவாமி

## நெஞ்சமெலாம் நிறைந்துவிட்ட திலீபன்

புயலாய் கிளம்பி
பூகம்பமாய் குமுறி
எரிமலையாய் வெடித்த
ஒரு பூ
திலீபன்

நாங்கள்
சுதந்திர காற்றை
சுவாசிப்பதற்காக
தன் சுவாசத்தையே
தற்கொடையாய்
ஈய்ந்தவன்

நல்லைக்கந்தன்
வீதியிலே
நீராகாரம் எதுவுமின்றி
நீண்ட மணி நேரம்
சுதந்திர தீ
வளர்த்தவன்

விடுதலை தீயை மூட்டி
தமிழன உணர்வுகளுக்கு
உரமூட்டி நின்றவன்
திலீபன்

இந்திய வல்லாதிக்கம்
இவன்
சிறகுகளை பிடுங்க
நினைத்தபோது திலீபன்
சுதந்திரவானில்
சிறகடித்துக்
கொண்டிருந்தான்

பசித்த வயிற்றோடு
தனித்திருந்து
விழித்திருந்து சுதந்திர
பயிர் வளர்த்தான்
இதனால்
இன்று எங்கள்
தெருவெங்கும்
திலீபனையல்லா
உச்சரித்துக்
கொண்டிருக்கிறது
ஆம்
திலீபன் மறையவில்லை
எங்கள் நெஞ்சமெல்லாம்
நிறைந்திருக்கிறான்
நிதமும் அவன்

து. இலக்கியா

## விடுதலை வேட்கை — கரை புரண்டோடும் திலீபன் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 5வது ஆண்டு நினைவஞ்சலியின் 11வது நாள் நிகழ்ச்சிகள் தமிழீழப் பிரதேசம் எங்கும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது

யாழ்.குடாவில் தொடர்ந்து நடைபெற்றுவரும் உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

தியாகி திலீபனின் 5வது நினைவு நாளான இன்றைய தினம் தமிழீழ எழுச்சித் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து யாழ். குடா எங்கும், சகல வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளினால் அலங்கரிக்கப்படும் வாழைகள், தோரணங்களால் அலங்கரிக்கப்படும் காட்சி தருகின்றன.

வீட்டுக்கு வீடும், குடாநாடெங்கும் கட்டடங்களைப் பார்க்கினும் எங்கும் திலீபனின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. சிறிய அளவு தொடக்கம் பெரிய அளவிலான படங்கள் பிரதான சந்திகளில் கட்டப்பட்டிருந்தன.

கச்சேரி-கண்டி வீதி, முத்திரைச் சந்தி சங்கிலியன் வீதிக் கருகிலும், கந்தர்மடம் பலாலி வீதியிலும் வைக்கப்பட்டுள்ள திலீபனின் திருவுருவப் படங்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, திலீபனுக்கு ஒளியைப் பரப்பி நிற்கிறது.

நல்லூர் ஆலய சுற்றாடல் பகுதி முழுவதும் மரக் கறிகள் நிறுத்தப்பட்டு சோடனை அலங்காரம் செய்யப்பட்டுள்ளதுடன் குழாய் பலப்புகள் பொருத்தப்பட்டுள்ளன, கோயில்வீதி - பருத்தித்துறை வீதி வரையில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

விடுதலைக்கீத எழுச்சி வாசகங்கள் திலீபனின் தியாக உண்ணாவிரதத்தை வெளிப்படுத்துகின்ற பதாகைகள் பெருமளவு கட்டப்பட்டுள்ளது. தியாக உணர்வு, விடுதலை வேட்கை கரைபுரண்டோடுகிறது.

வாகனங்கள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறந்தபடி உள்ளன. தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடி முக்கிய இடங்களிலும் பறந்து கொண்டிருக்கின்றன. (56)

## அந்த தியாக நாள்

ஓ......
அன்று ஒரு நாள!
பன்னிரண்டின் இறுதி நாள்!
கண்ணிரண்டும் செஞ்நீராய்
முன்நின்று ஓடிய நாள்!
சங்கூல் ஒலகிட......
சேவல் கூவிட......
காகம் கரைந்தொரு
காலை விடிந்திட......
காலம் தாழ்த்தியே—எம்
ஈழம் விடிந்த நாள்!

ஈழ மண்ணிலே...
ஓலம் கேட்டிட......புவி
மேழும் விழுந்தொரு
சோகம் பிறந்த நாள்!

ஆம்!
பசியினை வென்ற
பைந்தமிழ் மைந்தன்
'திலீபன்''
பார் வாழ் மக்களின்
நெஞ்சத்தில் உதித்த நாள்!

—வேலணையூர் சுரேஷ்

## வாழவேண்டும் என்றோ ஆளவேண்டும் என்றோ புலிகள் ஆசைகொள்ளவில்லை — திலீபன்

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் புலிகள் வாழவேண்டும் என்றோ, ஆளவேண்டும்என்றோ ஆசைகொள்ளவில்லை .எமது மக்களுக்கு நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.'' என்று கூறிய திலீபன் மரணித்த நாள் இன்றாகும்.

அவர் தமிழீழ மக்களை நோக்கிக் கூறிய சில இதயபூர்வமான கருத்துக்கள் வருமாறு:-

★ ''நான் ஆத்ம ரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலை அடைவார்கள்.''

★ ''ஒரு மாபெரும் சதி வலைக்குள் சிக்கிவரும் எம்மக்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும்.''

★ ''என் போராட்டம் வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகின்றேன்.''

★ ''நான் என்னுயிரிலும் பார்க்க நேசிக்கும் மக்களே நான் உங்களிடம் பெரும் பொறுப்பை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.'' (சு)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் தியாகி திலீபனின் 5ம் ஆண்டு நினைவையொட்டி, கொடிகாமம் பகுதிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் சிரமதானம் செய்யப்பட்டது.

கடந்த 14ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரையும் நாவற்காடு பகுதியில் உள்ள குளம் மேலும் ஒன்றரை அடி ஆழமாக்கப்பட்டு, குளங்களும் கட்டுகளும் சீர்செய்யப்பட்டது.

17ம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து ஆலடி பிள்ளையார் கோவில் வரை செல்லும் ஒன்றரை மைல் நீளமான வீதியில் இருமருங்கிலும் இருந்த பற்றைகள் வெட்டப்பட்டு வீதி செப்பனிடப்பட்டது.

## இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி
# பண்ருட்டி பேச முயன்றபோது
# தமிழக சட்டசபையில் அமளி

(சென்னை)

இலங்கை தமிழர் விவசாரம் குறித்து தமிழக சட்டசபையில் பேச பாட்டாளி மக்கள் கட்சி எம்.எல். ஏ. திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் முனைந்தபோது அ. தி. மு. க. காங்கிரஸ் உறுப்பினர்கள் சுமார் ஒருமணிநேரம் கூச்சல் குழப்பமிட்டு சபை நடவடிக்கையை நேற்று குழப்பினர்.

பாட்டாளி மக்கள் கட்சி ஊர்வலத்திலும் மாநாட்டிலும் ராஜீவை கொலை செய்ததாக கூறப்படும் தானுவையும் இவராசனையும் போற்றிபுகழ்ந்ததையும் பிரபாகரனின் படத்தை எடுத்துச்சென்றதையும் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் ஆதரிக்கிறாரா என சபையில் உறுப்பினர்கள் வினவினர்.

அப்போது சபையில் எழுந்த பண்ருட்டி ராமச்சந்திரன் இலங்கை தமிழர் பிரச்னை குறித்து பேசமுற்பட்டபோது சபையில் ஒரே, கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

தொடர்ந்து ஒருமணிநேரம் கூச்சல், குழப்பம நிலவியதால் பண்ருட்டிக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைய அவர் எதுவும் கூறமுடியாத நிலையில் இருக்கையில் அமர்ந்தார். (இ-சி)

## வர்த்தக ஊழியர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நல்லூரில் நடைபெறும் தியாகி திலீபனின் 5வது நினைவு தினத்தின் இறுதிநாள் வைபவங்களில் அனைத்து வர்த்தக ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க தலைவர் திரு. என். இராமச்சந்திரன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## ராமதாஸ் விடுதலையை எதிர்த்து
## தமிழக அரசு உயர் நீதிமன்றில்
# மேன் முறையீடுசெய்ய முடிவு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் ஜாமீனில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதை ஆட்சேபித்து தமிழக மாநில அரசு உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளது.

மேற்படி இருவரையும் பிணையில் விடுமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். ஜகதீசன் நேற்று முன் தினம் உத்தரவிட்டதையடுத்தே மேன்முறையீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## லெப். கேணல் சுபனுக்கு இன்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் சுபனின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று பின்வரும் இடங்களில் வைக்கப்படும்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியலயம், தட்டாதெருச் சந்தி, மானிப்பாய் சந்தி, சண்டிலிப்பாய், சங்கானைச் சந்தை, தொட்டிலடி, கந்தரோடை, சுன்னாகம், மருதனமடம், உரும்பராய், கோப்பாய், நீர்வேலி, ஆவரங்கால், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மாலுச்சந்தி சின்னத்தம்பி மகாவித்தியாலயம், கலிகைச்சந்தி, கனகம்புளியடிச்சந்தி, நுணுவில் 190-ம் கட்டை, சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமங்டுவாள், கிளாலி.

## பிரிட்டிஷ் பிரதமர் இந்தியா விஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்திய குடியரசுதின வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே இவர் இந்தியா வரவிருக்கிறார்.

இந்திய குடியரசு தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் முதலாவது பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேஜர் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)

பூநகரிப்பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 19 இரணுவத்தினர் இறந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (க)

## ராஜீவ்காந்தி பற்றிய தமிழ்ப்படம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையை அடிப்படையாகக்கொண்டு 'குற்றப்பத்திரிகை' என்ற தமிழ் திரைப்படம் தயாரிக்கப்படவிருக்கிறது.

பிரபல இந்தி திரைப்பட நடிகர் ஒருவர் ராஜீவ்காந்தியின் பாத்திரத்தில் நடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

## சண்டிகாஹோமம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனைப்பகுதி ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் தேவஸ்தானத்தின் சண்டிகாஹோமம் திவ்விய பெரும்யாகம் இன்று 26ம் திகதியும் நாளை 27ம் திகதியும் நடைபெறவுள்ளது. (வி-க)

## இன்று பொது விடுமுறை

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று பொதுவிடுமுறை தினமாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழீழம் எங்கும் இன்று தியாகி திலீபனின் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வீடுகள் தோறும் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (வி)

## பி. பி. ஸி. படப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப் கேணல் திலீபனின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று நாவாந்துறை வில்லூண்டிப் பிள்ளையார் கோவிலிலிருந்து பறவைக்காவடி ஒன்று நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி சென்றது.

மேற்படி காவடியை தற்போது யாழ் நகரில் நிற்கும் பி. பி ஸி. நிருபர் படமாக்கினார். காவடி எடுத்தவர் தமது கையில் புலிக்கொடியைதி தாங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது

தியாகி திலீபனின் இறுதி நாளான இன்று வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சிக் கோட்டங்களில் மாபெரும் நினைவுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (வி)

## பிரேமா நாடு திரும்பினர்

(கொழும்பு)

பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றிரவு நாடு திரும்பினார். (வி)

### தடுத்துவைக்கப்பட்டுள்ள

1ம் பக்கத் தொடர்ச்சி)

தவமாறு யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சிறைச்சாலை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

களுத்துறை மகசின் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வடபகுதி இளைஞர்களின் பெயர்ப்பட்டியலை கொழும்பிலிருந்து யாழ் அரசாங்க அதிபர் கொண்டு வந்து பத்திரிகைகளில் வெளியிட்டபின்பு அநேகர் தங்கள் உறவினர்களின் பெயர்கள் அதில் இல்லையென்று முறையிட்டதைத் தொடர்ந்தே யாழ். அரசாங்க அதிபர் சிறைச்சாலை ஆணையாளருக்கு இதுகுறித்து கடிதம் எழுதியுள்ளார் எனத் தெரியவருகின்றது. (இ-சு)

### திலீபன் நினைவுதினம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வலிகாமம் தளபதி இளங்குமரன் தேசியக்கொடியை ஏற்றிவைக்க தீவகத் தளபதி செழியன் உண்ணாநோன்பை ஆரம்பித்துவைப்பார்.

தியாகி திலீபன் மரணமடைந்த நேரம் காலை 10-48க்கு மௌன அஞ்சலியும் மாலை நான்கு மணிக்கு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனின் உண்ணாவிரதம் நிறைவு செய்தலும் இடம்பெறும்.

மாலை 4 30 மணிக்கு பொதுக்கூட்டம், நினைவுரைகள், சிறப்புரைகள் இடம்பெறுகின்றன.

கலை நிகழ்ச்சிகளாக மாலை 7-30 மணிக்கு தியாகி திலீபன் என்ற தலைப்பில் சின்னமணி குழுவினரின் வில்லுப்பாட்டும், தியாகதீபம் என்ற நாட்டிய நாடகமும் நடைபெறவுள்ளன.

இதேவேளை கப்டன் அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு பகுதியிலும், நுணாவில் (190-ம் கட்டை) மணங்குணாய் பிள்ளையார் ஆலய முன்றலிலும் உண்ணாநோன்பும், நினைவுக் கூட்டமும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-சு)

### புலிகளின் அதிகாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுவத்தினின் உடல்களையும், காயமடைந்தவர்களையும், இராணுவ ஹெலிகொப்டர்கள் ஏற்றிக்கொண்டு பல தடவைகள் பலாலிமுகாமுக்குக் கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### திலீபன் நினைவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தண்ணீர் வழங்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது. நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள புத்தூரிலிருந்து வாதரவத்தை கிராமத்துக்கு குழாய் மூலம் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. அதில் இன்று பவுசர் மூலம் தண்ணீர் அதிலிருந்து அக்காச்சி குடியிருப்புப் பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படுமென்றும் நாளடைவில் அக்காச்சி குடியிருப்புப்பகுதிவரை குழாய் மூலம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாதரவத்தை, அக்காச்சி குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிதண்ணீர்தான் பெரும் பிரச்சனையாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. (இ-சு)

### கைப்பற்றப்பட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

* புகைக்குண்டு - 07
* வெடிக்கவைக்கும்கருவி - 03
* ஐ. எம். ரவைகள் - 11,740
* ஐ. எம். ரவை லிங்குகள் - 1,803
* ஐ. எம். காஸ் ரவைகள் -20
* நேட்டோ ரவைகள் - 408
* நேட்டோ லிங்ரவைகள்-192
* 5.56 ரவைகள் - 274
* ரி-81 துப்பாக்கி பைனட்-03
* இராணுவ பெல்ட் - 27
* ஹெல்மட் - 31
* தண்ணீர் கான் - 38
* கிட்பாக் - 41
* ஆர். பி. டி. கோல்சர் - 01
* ஏ. கே. கோல்சர் - 15
* சாப்பாட்டு பெட்டிகள் - 21
* றெயின் கோட்டுகள் - 31
* சப்பாத்து (சோடி) - 90
* சிவில் சப்பாத்து (சோடி) - 100

(வி)

### ராஜீவ்

(1ம பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

குறிப்பிட்ட விடயம் இந்திரா காங்கிரஸின் சில உறுப்பினர்களுக்கும் அ. கி. மு. க. வினருக்கும் தெரியும் என்றும் தெரிவித்த அவர் முன்னாள் பிரதமர் லால் பகதூர்சாஸ்திரி, இந்திராகாந்தி ஆகியோரின் கொலைகளுக்கும் கே. ஜி. பி. யே திட்டம் தீட்டியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பாதுகாப்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதுங்கு குழிகளை விடுதலைப் புலிகளிடம் இழந்துள்ளதாகவும். பல இராணுவத்தினரைக் காணவில்லையென்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

கிழக்குப் பகுதியில் தொடர் தாக்குதலை நடாத்திய விடுதலைப்புலிகள் தற்போது வடபகுதியில் பூநகரிப் பகுதியை நோக்கி தமது இலக்கை திருப்பியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

### புலிகளின் மற்றொரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக அழித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பூநகரியின் தெற்குப் பக்கமாக சங்கிலிக்கோர்வை போல அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இதுவரை இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் ஒரே நேரத்தில் 62 காவலரண்களும், இரண்டுமினிமுகாமும் தகர்த்தெரியப்பட்டதுஇதுவே முதல் தடவையென்றும் கூறப்படுகின்றது. (வி)

### இறந்த

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன

மேலும் இவ்வார தொடக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 21 படையினர் கொல்லப்பட்டது கடந்த 5 நாட்களில் மட்டும் 39 படையினர் கொல்லப்பட்டதும் கடந்த ஜூலை மாதத்திலிருந்து இன்று வரை 300க்கும் அதிகமான படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலியானதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

### லெப். கேணல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விசேட தளபதி லெப். கேணல் சுபன் உட்பட 6 வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

1989ம் ஆண்டு மன்னார் மாவட்ட விசேட தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட லெப். கேணல் சுபன் (விஞசித்தம்பி சுந்தரலிங்கம்- இலுப்பைக்கடவை மன்னார்) பலதாக்குதல்களில் பங்குகொண்டு சிறப்புடன் வழிநடத்தியவர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனையோர் விபரம் வருமாறு;

லெப் தமிழேஸ்வரன் (கார்த்தியேசு ஜோகேஸ்வரன் -கரவெட்டி). லெப். அறிவுடையான் (செல்லையா உதயகுமார்-முழங்காவில்) 2ம் லெப். பன்னீர்ச்செல்வன் (சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ் டானியல்-தலைமன்னார்), 2ம் லெப் சுருளி (நவரட்ணம் ரவி- மூதூர்) வீரவேங்கை வெடி அரசன் (ராமப்பிள்ளை மகாலிங்கம் பூநகரி).

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். [வி]

## உண்ணாநோன்பு

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் தியாகி திலீபனின் 11ம் நினைவுநாளாக நேற்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் அடையாள உண்ணாநோன்பு நடைபெற்றது.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகள் சார்பில் நினைவுரைகளும், ஊழியர்கள் பொதுமக்கள் நினைவுரைகளும், கவிதைகளும் இடம்பெற்றன.

### ராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் தெரிவித்துள்ளார்.

தென்பகுதி இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு தயக்கம் காட்டி வருவதையே இது எடுத்துக்காட்டுவதாக இராணுவ அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைநேற்று அதிகாலையில் பூநகரி இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல், இராணுவத்தினருக்கு இந்தவாரம ஏற்பட்ட மற்றொரு அதிர்ச்சித் தோல்வி என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 32 இராணுவத்தினர் பலியானதும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட மற்றொரு பேரிழப்பு எனவும் இராணுவ அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக ... யாழ்ப்பாணம் இலங்கோவில் ... அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number ../16336/